DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THENI
C.C.No.23/20

Deposition of Witness: PW 3

| | |
|---|---|
| Name பாண்டியன் | Father’s Name |
| Village | Taluk |
| Caste | Calling |
| Religion | Age |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 15.06.2022

அரசு தரப்பில் முதல் விசாரணை

நான் கொடுவிலார்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன்.அசா1 எனக்கு அண்ணன். அசா2 அண்ணன் மகன். ஆஜர் எதிரிகளை தெரியும். கொடுவிலார்பட்டியில் சர்வேஎண். 283/141 ல் கண்ட நிலம் என் முன்னோர்களுக்கு பாத்தியப்பட்ட 8 செண்ட் நிலம். அதை என் மூதாதையர்கள் அனுபவித்து வந்தார்கள். 2005 ல் எனக்கு மாரிமுத்துசாமி தானசெட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்தார். அதனடிப்படையில் நான் கனரா வங்கியில் கடன் பெற்று வீடுகட்டியுள்ளேன். 23.1.10 ல் காலை 12 மணிக்கு எதிரிகள் மேற்படி இடம் எங்களுடையது என்ற வேனில் ஆட்களை கூட்டி வந்தார்கள். கிராமத்தில் உள்ளவர்கள் ஏன் வந்திருக்கிறிர்கள் என்று கேட்டபோது. அதற்கு அவர்கள் தங்களுக்கு பாத்தியப்பட்ட இடம் என்று கூறினார்கள். அதற்கு அவர்கள் கடுமையான வார்த்தைகளால் பேசினார்கள். அதற்குபின்பு வேனில் வந்தவர்கள் வேனில் சென்றுவிட்டார்கள். அதற்கு பிறகு அசா1 எஸ்பி அலுவலகத்தில் புகார் கொடுத்தார். அதற்குபின்பு பிசிபட்டி போலிசார் விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை

என் முதல் விசாரணையில் சம்பவம் 23.1.10 ல் நடந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். ஆனால் நாங்கள் எஸ்பி அலுவலகத்தில் 27 ல் புகார் கொடுத்தோம் என்றால் சரிதான். சம்பவம் நடந்தன்று போலிசாரிடம் நாங்கள் தகவல் சொல்லவில்லை என்றால் சரிதான். நான்கு நாட்கள் கழித்து தான் எஸ்பி அலுவலகத்தில்புகார் கொடுத்தோம் என்றால்சரிதான். நான் கூறுவது போல் சம்பவம் நடைபெற்றிருந்தால் உடனடியாக நான் காவல்நிலையத்தில் புகார் கொடுத்திருப்போம் என்றும், நடக்காத சம்பவத்திற்கு பின்னிட்டு பொய்யாக புகார் கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. எதிரிகள் வசம் தான் சொத்து உள்ளது என்றும் எதிரிகளை விரட்டுவதற்காக தான் நாங்கள் எங்கள் அதிகாரத்தை பயன்படுத்தி புகார் கொடுத்தோம் என்றால் சரியல்ல. சம்பவ இடத்திற்கு செல்லவில்ல என்றாலும் வழக்கிற்கு கேற்ப நான் பொய் சாடசி சொல்கிறேன் என்றால் சரியல்ல. புகார்தாரர் என் உறவினர் என்பதால் என்னை இந்த வழக்கில் சாட்சியாக சேர்த்துள்ளார்கள் என்றால் சரியல்ல.